**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 95/2017** **நாள்.04.08.2023**

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04 ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேல் | தொழில் | |
| த. பெ./க.பெ. | நடேசகவுண்டர் | சாதி | |
| கிராமம் | சின்னநொளம்பை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 60 |

**வ.சா.1**

**குறுக்கு விசாரணை**

I. எனக்கு எழுத, படிக்க தெரியாது. வழக்கு சொத்தில் பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி ராஜமாணிக்கம் எனது அண்ணன். தேவகி, செண்பகம் ஆகியவர்கள் என் அண்ணன் மகள்கள். வழக்கில் 2 அயிட்ட சொத்துக்களை குறிப்பிட்டுள்ளேன். வழக்குரையில் சொல்லியுள்ள ஜக்குபந்திகளை எனக்கு பாகமாக வந்த ஆவணத்தை பார்த்து எழுதியுள்ளேன். வெற்று பேப்பரில் பாகம் எழுதிக்கொண்டோம். வெற்று பேப்பரில் என் அண்ணன், தம்பிகள் 5 பேருக்கும் பாகம் பிரித்து A, B, C schedule எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தில் எந்த அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி பாகம் பிரித்துக்கொண்டு 37 வருடங்கள் ஆகிறது. வ.சா.ஆ. 1 ல் A, B, C என்று அட்டவணை குறிப்பிட்டு பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை 1ம் பிரதிவாதி எழுதினார். மேற்படி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்ட ஏழுமலை மற்றும் சேட்டு உள்ளார்கள். மற்ற சாட்சிகள் இறந்தவிட்டார்கள். அரிதாஸ், ராதாகிருஷ்ணன், தேவராஜ் , சேட்டு , ஏழுமலை ஆகியோர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்தார்கள்.

II. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சின்னகுழந்தை அம்மாள் நிலத்தில் 30 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆகவே மேற்படி சொத்திற்கு என்னால் சர்வே நெம்பர் சொல்ல முடியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் நாங்கள் சகோதரர்கள் 5 பேரும் பாடுபட்டு 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது . 5 பேர் பாடுபட்டு 1ம்

பிரதிவாதி பெயரில்கிரையம் வாங்கப்பட்டது என்பதை என்னுடைய வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி புருசோத்தமனிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். அவர் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண். 51/2 ஆகும். அதன் விஸ்தீரனம் 2 ஏக்கர் 37 சென்ட் ஆகும். **1ம் பிரதிவாதி பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது ஆகும். அது .பி.சா.ஆ. 1 /வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா 4, 5 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி ஆனந்தாயி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு தானபத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சகோதரர்கள் 5 பேரும் சேர்ந்து 1ம் பிரதிவாதி பெயரில் பெற்ற சொத்தை அவர் 2,3 பிரதிவாதிகளுக்கு தான பத்திரம் மூலம் எழுதிவைத்துள்ளார்.

III. வழக்கு சொத்துக்களுக்கு என் பெயரில் தனிபட்டா இல்லை. கூட்டு பட்டா உள்ளது. வழக்கு சொத்துகளை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஊர் மக்கள் முன்னிலையில் பாகம் பிரித்துக்கொண்டதால் எழுதப்பட்டது. நான் இவ்வழக்கில் தவறாக பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும், அதற்கான நீதிமன்ற கட்டணத்தையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் பாக பிரிவினை ஏற்படவில்லை என்றாலும், வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களையும் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். வழக்கு சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்றாலும், அதில் நான் உரிமை கொண்டாடுவது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு செல்லதக்கது அல்ல என்றாலும், தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 34 வருடங்களாக விரோதம் என்றால் சரிதான். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உள்ள விரோதத்தின் காரணமாக வா.சா.ஆ. 1 ஆவணத்தை தயார் செய்து கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.